குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 61/2017

அ.சா. 3

2025–ம் ஆண்டு நவம்பர் 26–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 3–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெள்ளையம்மாள் | தொழில் | |
| தந்தை பெயர் | கேசவன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.48 மணி,

Accused A1 Vijayavarman, A2 Jayakumar Present. A3 Thangavel Died and Charge Abated. Advocate Mr. M.Raja present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் நல்லகவுண்டம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு பகல் 12 – 1 மணியளவில் அ.சா.1 ன் வீட்டருகே சத்தம் கேட்டது. நான் அருகில் சென்று பார்த்தேன். அ.சா.1 ன் வீட்டின் ஜன்னல் கண்ணாடி உடைந்துகிடந்தது. அ.சா.1 பன்னீருக்கு தலையில் காயம் ஆகி இருந்தது. அவருக்கு எப்படி காயமானது என்றும் ஜன்னல் கண்ணாடி எப்படி உடைந்தது என்றும் எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தனர்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 03.03.2016 ம் தேதி மதியம் 01.00 மணியளவில் எதிரிகள் மூவரும் அ.சா.1 ன் வீட்டிற்கு சென்று அங்கிருந்த அ.,சா.1–ற்கு சொந்தமான TN 54 F 8239 என்ற பதிவு எண் கொண்ட Scooty Plus வாகனத்தை கீழே தள்ளி சேதப்படுத்தினார்கள் என்றும் 1ம் எதிரி அ.சா.1 ன் வீட்டின் கண்ணாடி ஜன்னலை உடைத்தார் என்றும் 3ம் எதிரி அ.சா. 1 யை

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.26 18:00:12 +0530

பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றும் 2ம் எதிரி பட்டியல் சாட்சி மீனா என்பவரை பார்த்து கெட்டவார்த்தையால் திட்டினார் என்றும் 2ம் எதிரி அ.சா.1 ன் கழுத்தில் கையால் கீறினார் என்றும் 3ம் எதிரி அ.சா.1 ன் நெஞ்சு, முதுகு ஆகிய இடங்களில் கையால் அடித்தார்கள் என்றும். எதிரிகள் மூவரும் சேர்ந்து பட்டியல் சாட்சி மீனா என்பரை கீழே தள்ளி கையால் அடித்து அ.சா.1 யை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்துவிட்டு விசாரணையின்ள போது கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எதிரிகள் மூவரும் நின்றுகொண்டிருந்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. ஆஜர் எதிரிகள் மூவரும் எங்கு நின்றுகொண்டிருந்தார்கள் என்றால் வீதியில் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் அ.சா.1 திண்ணையில் உட்கார்ந்திருந்தார். எதிரிகள் சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. அ.சா.1 க்கு சொந்தமான இருசக்கர வாகனம் கீழே விழுந்து கிடந்தது. இவ்வழக்கு தொடர்பாக காவல் நிலையம் செல்லவில்லை. போலிசார் என்னை விசாரித்து கையொப்பம் பெறவில்லை என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.56. மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.26 18:00:46 +0530